**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, RANIPET**

Case No. **SC.No.103/2023**
Prosecution: **PW1**

Deposition of the witness of **LW1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கார்த்தி | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.தணிகைவேல் | Occupation | கூலி வேலை |
| Village /Area | திமிரி | Age | 23 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 3105 0601 2155 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **12.02.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள திமிரி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரும் என் ஊரை சேர்ந்தவர்கள். அவர்களை எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கில் இறந்து போன கலையரசன் என்பவரும், காயம்பட்ட கோபிநாத் என்பவரும் என் ஊரை சேர்ந்தவர்கள். 02.08.2022-ம் தேதி சம்பவம் நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு என் ஊரை சேர்ந்த சுப்பிரமணியன் (எ) குண்டு என்பவர் குத்தகைக்கு எடுத்து மீன் விட்டிருந்த விளாரி கிராமத்திலுள்ள ஏரியில் நானும், தனுஷ், கோபி, கலையரசன் மற்றும் வசந்த் ஆகியோர் மீன் பிடித்தோம். நாங்கள் மீன் பிடித்ததை சுப்பிரமணியன் பார்த்துவிட்டார். அவர் எங்களை அடிக்க வந்ததால் நாங்கள் அவரை அடித்தோம். அதன் பிறகு அன்று இரவே நாங்கள் அனைவரும் சென்னைக்கு புறப்பட்டு சென்றுவிட்டோம். அதன் பிறகு சுப்பிரமணியன் எங்கள் மீது கொடுத்திருந்த வழக்கில் ஜாமீன் பெற்றுவிட்டோம். அதன் பிறகு நாங்கள் ஊருக்கு வந்து ஒரு வாரம் எங்கும் போகாமல் இருந்தோம். 2, 4 எதிரிகள் சுப்பிரமணியன் என்பவருக்கு அண்ணன், தம்பி உறவு முறை உள்ளவர்கள்.

பின்னர் 02.08.2022-ம் தேதி பகல் 11.00 மணியளவில் கலையரசன் ஓட்டிய மோட்டார் சைக்கிளில் நானும், என் நண்பன் கோபிநாத் ஆகிய இருவரும் பின்னால் அமர்ந்து என் ஊரிலுள்ள அம்பேத்கார் தெருவிலிருந்து

ராமபாளையம் ரோடு வழியாக திமிரிக்கு முடி வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தோம். அப்போது செல்வராணி என்பவர் எங்களை பார்த்து திருட்டு மீன்கள் பிடித்து தின்னவங்க போறாங்க என்று அசிங்கமான வார்த்தைகளால் சேர்த்து பேசினார். செல்வராணி அவரது மகன் அசோக் என்பவரிடம் அவன்களை சும்மா விடாத என்று சொன்னார். உடனே அசோக்கின் அப்பா தினகரன் ஒரு இரும்பு ராடை எடுத்து அசோக்கிடம் கொடுத்து இவங்களை அடித்து சாவடிங்கடா என்று சொன்னவுடன் அசோக் அந்த இரும்பு ராடை வைத்து மோட்டார் சைக்கிளில் நடுவில் அமர்ந்து சென்ற என்னுடைய பின் தலையில் அடித்தார். அப்படியே நாங்கள் மூன்று பேரும் தடுமாறி மோட்டார் சைக்களோடு சேர்ந்து கீழே விழுந்துவிட்டோம். நாங்கள் எழுந்தவுடன் அசோக் என்பவர் கத்தியால் கோபிநாத்தை வெட்ட வந்த போது கோபிநாத் ஒதுங்கியதால் அந்த வெட்டு கோபிநாத்தின் இடதுபக்க புருவத்திற்கு மேல் பட்டு காயம் ஏற்பட்டது. கலையரசன் அங்கிருந்து ஓட முயன்ற போது அதே கத்தியால் அசோக் என்பவர் கலையரசனின் பின் கழுத்தில் வெட்டினார். பின்னர் தினகரன் இரும்பு ராடால் என்னை அடிக்க வந்த போது நான் இடது கையால் தடுத்ததால் எனக்கு இடது கையில் மணிக்கட்டு அருகில் எலும்பு உடைந்துவிட்டது. அதன் பிறகு செல்வராணி என்பவர் இரும்பு ராடில் சுற்றப்பட்டிருந்த முள்கம்பியை எடுத்து சீனிவாசன் என்பவரிடம் கொடுத்து இவர்கள் யாரையும் உயிரோடு விடாதீர்கள் என்றும், இங்கேயே அடித்து சாவடிங்கள் என்று சொன்னார். அதன் பிறகு முள்கம்பியாலும், கட்டையாலும் சீனிவாசன், தினேஷ் மற்றும் சரத் ஆகியோர் என்னையும், கோபிநாத்தையும் தாக்கியதில் எனக்கு வலது பக்க தோள்பட்டையிலும், கோபிநாத்திற்கு இடதுபக்க தோள்பட்டையிலும் காயம் ஏற்பட்டது. கோபிநாத் தடுத்த போது அவரது இடது கை சுண்டுவிரலிலும் காயம் ஏற்பட்டது. எதிரிகள் தினேஷ், அசோக், சீனிவாசன், செல்வராணி, சரத் ஆகிய அனைவரும் நாங்கள் சென்ற மோட்டார் சைக்கிளை அடித்து உடைத்த போது எங்கள் வீட்டிலிருந்து என் அண்ணன் வந்துவிட்டார். கலையரசன் ரத்த வெள்ளத்தில் அங்கேயே விழுந்துவிட்டார். அடிபட்ட என்னை என் அண்ணன் திமிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். பின்னர் மேல்சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டேன்.

நான் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது கலையரசன் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நாங்கள் சென்ற மோட்டார் சைக்கிள் பதிவு எண்.TN–73–Z–0662 ஆகும். அந்த மோட்டார் சைக்கிள் கலையரசனின் அண்ணனுக்கு சொந்தமானது. சம்பவம் சம்மந்தமாக நான் திமிரி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். என்னிடம் காண்பிக்கப்படும் வெட்டுக்கத்தி, இரும்பு ராடு, முள்வேலி கொம்புகள் (2) ஆகியவற்றை தான் எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்தினார்கள்.

வெட்டுக்கத்தி **சா.பொ.1** ஆகும். இரும்பு ராடு **சா.பொ.2** ஆகும். முள்வேலி கொம்புகள் (2) **சா.பொ.3** மற்றும் **சா.பொ.4** ஆகும். சம்பவ நாளில் கலையரசனும், நானும், கோபிநாத்தும் சென்ற பதிவு எண்.TN-23-AZ-0662 கொண்ட மஞ்சள் நிற ஹோண்டா ஆக்டிவா மோட்டார் சைக்கிள் **சா.பொ.5** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவத்தில் கலையரசன் என்பவருக்கு பின் கழுத்தில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. அசோக் என்பவர் கத்தியால் வெட்டியதால் கலையரசனுக்கு அந்த காயம் ஏற்பட்டது. அந்த காயம் பின் கழுத்தில் படுக்கை வசத்தில் இருந்தது. அதனால் அவரது கழுத்து நரம்பு அறுபட்டிருந்தது. எனக்கு காயம் ஏற்பட்ட பிறகு என் அண்ணனுடன் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது மயக்கம் வந்தது. கூச்சல் கேட்டு கிராமத்தினர் வந்தனர். எதிரிகளின் வீடுகள் பக்கத்து பக்கத்தில் அமைந்துள்ளது. அசோக் என்பவர் வீட்டின் எதிரில் சம்பவம் நடந்தது. சுப்பிரமணியன் (எ) குண்டு ஏரியில் மீன் குத்தகை எடுத்திருந்தார். நானும், கலையரசன், கோபிநாத் ஆகிய மூவரும் அடிக்கடி அந்த ஏரியில் மீன் பிடித்ததால் தான் அவர் எங்களை கண்டித்த போது நாங்கள் அவரை அடித்திருக்கிறோம் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தில் எதிரிகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. எதிரிகள் கத்தி, இரும்பு ராடு, முள்வேலி ஆகிய ஆயுதங்களை கொண்டு எங்களை தாக்கியதாக நான் சொல்வது தவறு என்றாலும், அவர்கள் எங்களை தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. அசோக் மற்றும் சேகர் ஆகியோர் அவர்கள் வீட்டிலிருந்த போது கோபிநாத் மோட்டார் சைக்கிளில் வந்து அங்கு நிறுத்தி அவர்களை பார்த்து அசிங்கமாக பேசி மீன் பிடித்த பிரச்சனையில் உங்களை அன்றைக்கே சரியாக வெட்டாமல் விட்டுவிட்டோம் என்றும், இப்ப வாங்கடா என்று மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த உருட்டு கட்டையை எடுத்து அவர்களை கோபிநாத் அடிக்க வந்துள்ளார் என்றாலும், அந்தக் கட்டையை சேகர் பிடுங்கி தூரமாக போட்டுள்ளார் என்றாலும், உடனே கோபிநாத் அவர்களை பார்த்து எங்கள் ஆட்களை கூட்டி வந்து என்ன செய்கிறோம் பார் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்று அன்றைய தினமே காலை 10.45 மணிக்கு கோபிநாத், காகா வசந்த், சின்னக்குட்டி மகன் தனுஷ், கோபிநாத்தின் அண்ணன் விஜய பாஸ்கர், கார்த்தி, குமரேசன் மற்றும் சிலருடன் வந்து கையில் தடி மற்றும் கத்தியுடன் வந்து தினகருடன் தகராறு செய்து உன் அண்ணன் சுப்பிரமணியன் பெரிய ஆளா என்றும், கெட்ட வார்த்தையால் திட்டியும், தினகரனை கார்த்தி என்பவர் தடியால் முதுகில் அடித்து காயம்படுத்தியுள்ளார் என்றாலும், அப்போது சேகர் தடுத்த போது தனுஷ், காகா வசந்த் ஆகியோர் உன்னை ஒழித்தால் தான் எங்களுக்கு நிம்மதி என்று சொல்லி அவர்கள் இருவரும் கையில் வைத்திருந்த தடியாலும், இரும்பு ராடாலும் சேகரை அடித்துள்ளனர் என்றாலும், தனுஷ் என்பவர் சேகர் தலை மீது இடது பக்கம்

அடித்துள்ளார் என்றாலும், அதை கையால் தடுத்த போது காகா வசந்த் என்பவர் முழங்கை மீது இரும்பு ராடால் அடித்து காயம்படுத்தியுள்ளார் என்றாலும், அவர்களது கூச்சல் கேட்டு செல்வராணி, அசோக் ஆகியோர் சண்டையை விளக்கிவிட வந்துள்ளனர் என்றாலும், அப்போது நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு வீட்டின் அருகில் நிறுத்தி வைத்திருந்த நான்கு இருசக்கர வாகனங்களை அடித்து நொறுக்கியுள்ளோம் என்றாலும், அந்த மாதிரி நொறுக்கும் போது அந்த இடத்தில் கோவிந்தசாமி மகன் சூரியா மற்றும் அவருடன் வந்த அடியாட்கள் அந்த வாகனங்களை மீண்டும் அடித்துள்ளார்கள் என்றாலும், வீட்டின் அருகில் வைத்திருந்த காய்கறிகளையும் சாலையில் வீசி சேதப்படுத்தியுள்ளனர் என்றாலும் சரியல்ல. அவ்வாறு வாகனங்களை அடித்து நொறுக்கிய போது அசோக் என்பவர் எங்களை தடுத்து தள்ளிவிட்ட போது கலையரசன் அந்த வாகனங்களுக்கு இடையில் சிக்கியதால் அவரது கழுத்தில் அடிபட்டுள்ளது என்றாலும், அசோக் என்பவர் கலையரசனை கத்தியால் வெட்டவில்லை என்றாலும் தவறு. அந்த தள்ளுமுள்ளு ஏற்பட்ட போது தான் எனக்கும் காயம் ஏற்பட்டுள்ளது என்றாலும், என்னை எதிரிகள் தாக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் வீட்டில் அமைதியாக இருந்த போது பழைய சம்பவத்தில் விரோதம் கொண்டு நானும், என் நண்பர்களும் ஆயுதங்களுடன் எதிரிகளின் வீட்டினிடம் வந்து அவர்களை தாக்கி அவர்களது பொருட்களையும் தாக்கி சேதப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

சம்பவ இடத்திலிருந்து கலையரசனையும், கோபிநாத்தையும் யார் எப்படி அழைத்து சென்றார்கள் என்றால் திமிரி அரசு மருத்துவமனையில் வைத்து கலையரசனை பார்த்தேன். கோபிநாத்தை நான் பார்க்கவில்லை. நான் திமிரி அரசு மருத்துவமனைக்கு சம்பவ இடத்திலிருந்து என் அண்ணனுடன் மோட்டார் சைக்கிளில் அரை மணி நேரத்தில் சென்றுவிட்டேன். சம்பவ இடத்திற்கும், திமிரி அரசு மருத்துவமனைக்கும் இடையில் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். நானும், கலையரசனும், தனுஷ், காகா வசந்த் மற்றும் கோபிநாத் ஆகியோர் பெரும்பாலும் ஒன்றாக சேர்ந்து போவோம், வருவோம் என்றால் சரிதான். என் மீது காவல் நிலையத்தில் மூன்று குற்ற வழக்குகள் உள்ளது. அரசு பேருந்திற்கு சேதம் விளைவிப்பது, ஆட்களை அடிப்பது மற்றும் பொதுமக்களுடன் தகராறு செய்வது போன்ற வழக்குகள் என் மீது உள்ளது என்றால் சரியல்ல. கலையரசன் மீது 9 குற்ற வழக்குள் இருந்ததா என்றால் எத்தனை வழக்குகள் இருந்தது என்று எனக்கு தெரியாது. என் நண்பர்களில் கோபிநாத் மீதும், இரண்டு முறை காகா வசந்த் மீதும் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றால் கோபிநாத் மீது குண்டர் தடுப்பு சட்ட நடவடிக்கை எடுத்தது மட்டும் தெரியும். விளாரி ஏரியிடம் நாங்கள் அனைவரும் ஒன்று கூடி கஞ்சா அடித்துக்கொண்டு சுப்பிரமணியன் (எ) குண்டு என்பவரை அடிக்கடி துன்புறுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் ஏரிக்கு அடிக்கடி

செல்லும் போது அவர் எங்களை தடுப்பதை மனதில் வைத்து கலையரசன் வேறு வகையில் இறந்ததை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்ட வழக்கு சொத்துகளை கொண்டு எதிரிகள் யாரும் எங்களை தாக்கவோ, காயப்படுத்தவோ இல்லை என்றால் சரியல்ல. அந்த ஆயுதங்களை நாங்கள் தான் சம்பவத்தில் பயன்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

(காவல் நிலைய பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சா.பொ.5 மோட்டார் சைக்கிள் விசாரணைக்காக இன்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு, விசாரணை முடிந்தவுடன் திமிரி காவல் நிலைய காவலர் பொறுப்பில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.)

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN
Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.